பாடம் 22

என் அரணான ஆண்டவர்

திரு விவிலியத்தில் இறைவாக்கினர்களைப் பற்றிக் கூறப்படுகிறது. யார் இந்த இறைவாக்கினர்கள் என்று நீங்கள் சிந்திப்பீர்கள். ஆம், மகனே! மகளே! இறைத் தந்தையின் செய்தியை மக்களுக்கு எடுத்துக் கூறுபவர்கள் தான் இறைவாக்கினர்கள். இவர்கள் அந்தந்தக் காலங்களில் வாழ்ந்த மக்களுக்கு இறை அரசைப் பற்றிப் போதித்தார்கள். இறை அன்பைப் பற்றிச் சொல்லிக் கொடுத்தார்கள்.

இறைத் தந்தையைப் பற்றி மக்களுக்கு அறிவித்து அவர்களை நல்வழியில் வழிநடத்தியபடியால், இவர்களை இறைவாக்கினர்கள் என்று அழைக்கிறோம்.

இவ்வாறான ஒரு இறைவாக்கினரைப் பற்றித்தான் நாம் இப்போது படிக்கப்போகின்றோம். **"எலியா"** எனப்படும் இறைவாக்கினர் இறைவனில் மிகவும் அன்புடையவராக இருந்தார். அவர் அந்நாட்களில் வாழ்ந்த மக்களுக்கு ஒரே இறைத் தந்தையைப் பற்றிக் கற்பித்தார்.

ஒரு நாள் அதிசயமான ஒரு சம்பவம் நடைபெற்றது. எலியா மக்களுக்கு இறைத் தந்தையைப் பற்றிப் போதித்துக் கொண்டு ஊரூராகச் செல்லும்போது ஒரு வரண்ட பாழடைந்த பகுதியினூடாகச் செல்ல வேண்டி இருந்தது. நடந்து வந்த களைப்பினால் அவர் அங்கிருந்த ஒரு மரத்தடியில் இளைப்பாறினார். அவர் அயர்ந்து தூங்கிவிட்டார். அவர் இளைப்பாறிய இடத்திலிருந்த சூரைச் செடியின் பெயர் **"றோனெம்"** என்பதாகும்.

எலியா அந்த இடத்தில் தனிமையாக இருப்பதை இறைத் தந்தை கண்டார். அவரில் அன்பு கொண்டார்.

எலியா ஆழ்ந்த நித்திரையில் இருந்தார். அப்போது அவருக்கு ஒரு குரல் சப்தம் கேட்டது.

"எழுந்து சாப்பிடும், எழுந்து சாப்பிடும்"

அப்போது அவர் கண் விழித்தார்.

என்ன புதுமை! என்ன ஆச்சரியம்!

"ஆ ..... அப்பமும் தண்ணீரும் இருக்கிறதே" என்று எலியா தன்னை அறியாமலே கூறினார்.

"எழுந்து சாப்பிடும், எழுந்து சாப்பிடும்" என்ற சப்தம் மறு படியும் கேட்டது.

இறைவனின் அன்பை உணர்ந்து எலியா மகிழ்ச்சி அடைந்தார்.

சாப்பிட்டார், வயிறு நிரம்பச் சாப்பிட்டார். தண்ணீரையும் குடித்தார். அந்த உணவின் சக்தியால் பல நாட்கள் அவர் உணவு இல்லாமலே வாழ்ந்தார். இப்போது எலியா முன்னை விட

அதிக ஆர்வத்துடன் மக்களுக்கு இறைத் தந்தையைப் பற்றிப் போதித்தார்.

அன்று இறைத் தந்தை கொடுத்த உணவை உண்டதினால் எலியா வலிமை பெற்றார் என்பதை இப்போது நீங்கள் நன்கு அறிந்தீர்கள். ஆம் பிள்ளைகளே! அன்று இறைத் தந்தை எலியாவுக்கு அப்பமும் தண்ணீரும் உணவாகக் கொடுத்தார். எனவே, மக்கள் இறைத் தந்தைக்கு அப்பத்தைக் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கத் தொடங்கினார்கள். அப்பத்தைக் காணிக்கையாக ஒப்புக் கொடுத்த பின்னர் அதைப் பிட்டுச் சாப்பிட்டார்கள். அதன் வழியாக இறை அன்பை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள்.

இன்றும் திருப்பலியின் போது, இயேசுநாதர் தரும் உணவாகிய சிறிய அப்பத்தை நாம் அனைவரும் பகிர்ந்து உண்ணுகின்றோம். ஆம் பிள்ளைகளே, அன்று எலியாவுக்கு இறைத் தந்தை கொடுத்த அதே உணவை, இன்று இறைத் தந்தை எங்களுக்கும் தருகின்றார். அதனை நாம் இன்று தேவநற்கருணை என்று அழைக்கிறோம். அன்று போல் இன்றும் நாம் ஆன்ம உணவின் வழியாக ஊட்டம் பெறுகின்றோம்.

இறைத் தந்தை இந்த உணவின் வழியாக எம்மைப் பாதுகாத்து வழிநடத்துகின்றார்.

ஒப்படை

1. எலியா தனிமையிலிருக்கும் போது நடந்த சம்பவத்தைச் சுருக்கமாக எழுதுக.
2. எலியா பசியோடிருக்கும் போது அவரில் இரக்கம் கொண்ட இறைவன் என்ன செய்தார்?
3. இறைவன் கொடுத்த உணவை உண்டு பசியாறிய எலியா என்ன செய்தார்?